1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இல்லை.

சரக்கன் ஓடையின் குறுக்கே பாலம்

*441 வினா—**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் வட்டம், ஆழ்வார்திருநகரி ஒன்றியத்தி லுள்ள கடையனோடை ஊராட்சி மன்ற எல்லையிலுள்ள சரக்கன் ஓடையின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

ரெங்கசமுத்திரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தொட்டி

* 442 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிபட்டி ஒன்றியத்தால் ரெங்கசமுத்திரத்தில் குடிநீருக்கு மேல்நிலை நீர்த்தொட்டி கட்ட தீர்மானம் 1972-ம் வருடம் நிறைவேற்றப்பட்டும், வேலை மேற்கொள்ளாமல் இருப்பதின் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதுரை மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தொட்டி கட்டுவது சம்பந்தமாக 1970-ம் ஆண்டு (1) எம். சுப்புலாபுரம், (2) வண்டியூர், (3) டி. மீனாட்சிபுரம், (4) ராஜாக்காள்பட்டி, (5) ரெங்கசமுத்திரம் ஆகிய 5 ஊர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிதி ஒதுக்கீட்டிற்குத் தகுந்தாற்போல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முதல் நான்கு கிராமங்களிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ரெங்கசமுத்திரம் கிராமத்தில் நீர்த்தேக்க தொட்டி கட்டும் வேலைக்கு ரூ. 24,000-ல் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தொழில் நுணுக்க அனுமதி